## சுருக்கம்

அறிவிப்புகள் 2020–21 – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – கன்னியாகுமரி மாவட்டம், இராஜக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள மணக்குடி பாலத்திற்கு “லூர்தம்மாள் சைமன் பாலம்” எனப் பெயர் சூட்டுதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மா அதி2) துறை

அரசாணை (நிலை)எண். 217

நாள் 22.12.2020
சார்வரி – மார்கழி 7
திருவள்ளுவர் ஆண்டு – 2051
படிக்கப்பட்டது:

மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், கடிதம் எண்.ந.க.சி3/26432/2020, நாள் 10.10.2020 மற்றும் 24.11.2020.

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.11.2020 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> “பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் ஆட்சியில் இடம் பெற்ற ஒரே பெண் அமைச்சர் திருமதி.லூர்தம்மாள் சைமன் ஆவார். இவர் சிறந்த நிர்வாகி, தொலை நோக்குப் பார்வையுடன் ஏழை, எளிய மக்களுக்காக பல திட்டங்களை வகுத்தவர். அன்னாருக்கு பெருமை சேர்க்கும் வகையில் மணக்குடியில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்திற்கு லூர்தம்மாள் சைமன் பாலம் என பெயர் சூட்டப்படும்.”

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள மணக்குடி பாலத்திற்கு தமிழகத்தின் முன்னாள் உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் மறைந்த திருமதி.லூர்தம்மாள் சைமன் என்பவருடைய பெயரினை சூட்ட மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதி அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக வருவாய் கோட்டாட்சியர், நாகர்கோவில்; மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோட்டப் பொறியாளர், கட்டுமானம்; மற்றும் உதவி இயக்குநர், ஊராட்சிகள் ஆகியோரிடம் அறிக்கை கேட்கப்பட்டதாகவும் தெரிவித்து அவ்வறிக்கையின் விவரங்களை அரசுக்கு அனுப்பியுள்ளார். அவை பின்வருமாறு:

<u>உதவி இயக்குநர், ஊராட்சிகள்:</u>

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணக்குடி ஊராட்சி, மேலமணக்குடி மற்றும் கீழ மணக்குடி என்ற இரு கடற்கரை குக்கிராமங்களை

உள்ளடக்கிய ஊராட்சி ஆகும். இவ்விரு குக்கிராமங்களையும் பழையாறு பிரிக்கிறது. பழையாறு கடலில் கலக்குமிடத்தில் இவ்விரு குக்கிராமங்களுக்கும் இடையே இணைப்புப் பாதை ஏதும் இல்லாததால் இவ்விரு குக்கிராமங்களுக்கிடையே மக்கள் சென்றுவர சாலைவழியாக 12 கிலோ மீட்டர் சுற்றி செல்லும் நிலையிருந்தது. பின்னர், தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய பாலம் பேருந்துகள் மற்றும் அனைத்துரக வாகனங்களும் செல்லும் விதமாக புதியதாக கட்டப்பட்டு 31.10.2013 அன்று மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பாலத்தின் நீளம் 370 மீட்டர் ஆகும். இப்பாலம் மேற்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ளதால் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியை பிற கடற்கரை பகுதிகளுடன் எளிதில் இணைக்கும் வகையில் அமைந்துள்ளது.

தமிழகத்தின் முன்னாள் உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திருமதி.லூர்தம்மாள் சைமன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி ஊராட்சியில் 1911 ஆம் ஆண்டு பிறந்தார். 1957 ஆம் ஆண்டு குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அமைச்சரவையில் உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சராக 1957–1962 வரை பணியாற்றியுள்ளார். இவருடைய பணிக்காலத்தில் உள்ளாட்சி நிர்வாகத்திலும், மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் பெரும் பங்காற்றியுள்ளார். இவர் மீன்பிடித் தொழிலுக்காக நைலான் மீன்பிடி வலைகள் செய்யும் தொழில் நுட்பத்தையும் விசைப்படகுகளின் பயன்பாட்டினையும் அறிமுகப்படுத்தினார். எனவே அன்னாரின் நினைவை போற்றும் வகையிலும் அவரை பெருமைப்படுத்தும் வகையில் மணக்குடி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு “லூர்தம்மாள் சைமன் பாலம்” எனப்பெயர் சூட்ட பரிந்துரை செய்யப்படுகிறது.

- <u>வருவாய் கோட்டாட்சியர்</u>

திருமதி.லூர்தம்மாள் சைமன் என்பவரின் பெயரினை சூட்டக்கோரிய பாலமானது வடக்கு தாமரைக்குளம் கிராமம் புல எண். 807 அரசு புறம்போக்கு ஆறு என்னும் வகைபாடு கொண்ட இடத்தில் உள்ளது. மேற்படிபாலம் வடக்கு தாமரைக்குளம் கிராமத்தில் கீழ மணக்குடியிலிருந்து மேலமணக்குடிக்கு செல்லும் பாலமாகவும், தேசிய நெடுஞ்சாலையாகவும் காணப்படுகிறது. இப்பாலம் 2012–2013ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. பாலம் உயர் மட்டபாலமாக உள்ளது. இப்பாலத்திற்கு திருமதி.லூர்தம்மாள் சைமன் என்பவர் பெயரினை சூட்டுவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. பொதுமக்கள் திருமதி.லூர்தம்மாள் சைமன் என்பவர் தங்கள் ஊரில் பிறந்து வளர்ந்தவர். மக்களுக்கு பல நலத்திட்ட உதவிகள் செய்தவர் மேற்படி பாலத்திற்கு திருமதி.லூர்தம்மாள் சைமன் என்பவரின் பெயரினை சூட்டுவதற்கு எவ்வித ஆட்சேபனையும் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்பில்லை.

<u>கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு</u>

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நெடுஞ்சாலை, கட்டுமானம் மற்றும் பாராமரிப்பு கோட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலையான கன்னியாகுமரி–பழைய உச்சக்கடைசாலை (SH-179)-ல் கி.மீ 7/8–ல் பழையாற்றின் குறுக்கே மேலமணக்குடி மற்றும் கீழமணக்குடி கிராமங்களை இணைப்பதற்கு நெடுஞ்சாலைத்துறை மூலம் உயர் மட்டபாலம் கட்டப்பட்டது. இப்பாலத்திற்கு மறைந்த முன்னாள் தமிழக அமைச்சர் திருமதி.லூர்தம்மாள் சைமன் அவர்களின் பெயரை சூட்டுவதற்கு, நெடுஞ்சாலைத்துறையில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

<u>மாவட்ட காவல்கண்காணிப்பாளர், நாகர்கோவில்</u>

கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி பகுதியில் பழையாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலத்திற்கு மறைந்த முன்னாள்அமைச்சர் திருமதி.லூர்தம்மாள் சைமன் என்பவரது பெயர் சூட்டுவதில் எந்தவித சட்டம் ஒழுங்கு பிரச்சனையும் ஏற்படவாய்ப்பில்லை.

3. மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள மணக்குடி பாலத்திற்கு தமிழகத்தின் முன்னாள் உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் மறைந்த திருமதி.லூர்தம்மாள் சைமன் என்பவரின் பெயரினை சூட்ட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்துள்ள நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள மணக்குடி பாலத்திற்கு தமிழகத்தின் முன்னாள் உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் மறைந்த திருமதி.லூர்தம்மாள் சைமன் அவர்களின் நினைவை போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில் “லூர்தம்மாள் சைமன் பாலம்” எனப் பெயர் சூட்டலாம் என்று அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.

**<u>நகல்</u>**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (ந.நி. ஊ.வ (ம) சிறப்புத்திட்டச் செயலாக்கம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
22/12/2021